2024 தேர்தல் குறித்துமுகநூல் இடுகைகள்

ஏப்ரல் 5-ஜூன் 10

Abstract

[Draw your reader in with an engaging abstract. It is typically a short summary of the document.
When you’re ready to add your content, just click here and start typing.]

ஆர் பட்டாபிராமன்



PATTABI's FB Postings on 2024 LS Elections

தேர்தல் குறித்து முகநூல் இடுகைகள்

2024 தேர்தல் குறித்து ஏப்ரல் 5 – ஜூன் 10 இடுகைகள் தொகுப்பு

April 5 2024

'I am always Right' is the most problematic claim of life whether in the family or in an organisation or in some position or in a leadership role and even in the so called Godly status

- Com Namari

கடவுள் நிலையிலிருந்தாலும், தலைமை ஸ்தானத்தில் இருந்தாலும், அரசாங்க உயர் பொறுப்புகளில் இருந்தாலும், அமைப்புகளினாலும், குடும்பத்திலானாலும் 'நானே எப்போதும் சரி' என்கிற உரிமை கோரல் வாழ்வின் பெரும்பிரச்னைக்குரியதாக இருக்கிறது

- தோழர் நமரி

April 6, 2024

Theory of Justice - தேர்தல் திருவிழா

காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கை -மானிபெஸ்டோவை வெளியிட்டுள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் தத்துவத்தில் புகழ் வாய்ந்த ஆக்கமாக ஜான் ரால்ஸ் அவர்களின் The Theory of Justice வெளியானது. நியாய கோட்பாட்டின் வழியிலான அரசியல், பகிர்வு நியாய வெளியின் விஸ்தரிப்பு என்பதை ரால்ஸ் மட்டுமல்ல அமர்த்யா சென், ழான் டிரீஸ் உள்ளிட்ட பலர் தொடர்ந்து பேசி வந்தனர்.

காங்கிரஸ் இந்த நியாயம் பேசும் பத்திரம் மூலம் தனது வாக்குறுதிகளை தந்துள்ளது. சிலர் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ போல் உள்ளது என்றும், திராவிட மாடல் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் விவரித்து வருகின்றனர். பாஜகவும் தனது அறிக்கையை விரைவில் வெளியிடலாம். வெளியிட்ட பின்னர் பார்க்கலாம்.

சில கட்சிகள் மட்டுமே தங்களால் அறுதி பெரும்பான்மையை பெறமுடியும் எனப் பேசிவருகின்றனர். தேசிய அளவில் பாஜக அப்படி முன்வைப்புகளை செய்து வருகிறது. மாநில அளவில் திமுக, திரிணமுல் அதனை செய்து வருகின்றனர். தேசிய அளவில் தங்களால் அறுதி பெரும்பான்மையை பெறமுடியும் என்ற உரிமை கோரலை காங்கிரஸ் வைக்காவிட்டாலும், இந்தியா கூட்டணி பெரும்பான்மை பெறும் என்கிற கோரலை முன்வைத்து வருகின்றனர்.

நாடாளுமன்ற இடங்களில் பாதிக்கு மேல் ஒருவேளை பாஜகவால் வரமுடியாமல் போனால், அவர்கள் single largest majority party என்கிற வகையில் ஆட்சி அமைக்க உரிமை கோருவர். ஒருவேளை இந்தியா கூட்டணி (தனியாக ஜனதா கட்சி போல ஒரே கட்சியாக அமைத்துக்கொள்ளாவிட்டாலும்) 'கூட்டணி சர்க்கார் ' அமைக்க பெரும்பான்மை எண்ணிக்கையை காட்டி உரிமை கோருவர். அப்போது குடியரசு தலைவர் செய்யப்போவது என்பது விவாதமாகலாம்.

தேர்தல் , மக்கள் வாக்களிப்பு என்பது துல்லியமான எல்லாகணிப்புகளையும் விஞ்சக் கூடியதாகவே இருக்கும். தலைவர்களும் அவர்களது கட்சிகளும் எண்ணுவது போல வாழ்வு அமையவும் கூடும் . ஆட்சி அதிகாரம் பெறவும் கூடும். சிலநேரம் அவர்கள் நம்பிக்கைக்கு பெருத்த அடி விழுவது போலவும் முடிவுகள் அமையலாம்.

தேர்தல் கூட்டங்களை வைத்தெல்லாம் வாக்காளர் மனதை கணிக்க முடியாது. கட்சி உறுப்பினர்கள் கூட சில நேரங்களில் வாக்காளர் மனநிலைக்கு போய்விடுவர். காசு பணம் விளையாடவே செய்யும். அதை கொடுப்பவர்களிடம் மனசாட்சி என்றெல்லாம் பேசுவது எடுபடாமல் போகும். அது பகிரங்கமாகவும் , முடியாவிட்டால் மிக இரகசியமாகவும் தொழிற்படும். வாங்குகிறவர்களிடம்

மனசாட்சி பேச்செல்லாம் எடுபடாமல் போகிறது. அது உரிமை போல் பார்க்கப்படுகிறது.

தோற்கடிக்கப்பட முடியாதவர் என எவரும் மக்களிடம் சவால் விட முடியாது என்பதே அனுபவமாக இருக்கிறது. உலகம் இந்த 18 வது தேர்தலையும் மிக கவனத்துடன் பார்த்து வருகிறது. இந்திய ஜனநாயகத்தின் நடனம் நளினமாக இருக்குமா, பேய்க்கூத்தாகிவிடுமா என்பதை அரசியல் வல்லுநர்கள் உற்று நோக்கி வருகின்றனர்.

கடைசி மனிதனுக்கும் வாய்ப்பும் வாழ்க்கையும் என்பதை நோக்கிய பயணமா- சிலருக்கான புல்லட் ரயில் விரைவு வளர்ச்சியா என்பது கடந்த பல தேர்தல்களைப் போல பேசு பொருளாகி , தேர்தலுக்கு பின்னால் தேய்ந்து ஓய்ந்து போவதை பார்க்கமுடிகிறது. இங்கு அரசியலே trickle down theory க்கு தன்னை ஒப்படைத்துக்கொண்டே பயணிக்கிறது. Evolution என்பதை புரிந்துகொள்ளலாம். வளர்ச்சி என்றாலே கூடுதல் marginalisation என்பதானால் எப்படி அது 'சப்கா விகாஸ் ' ஆகும்...

75 ஆண்டு இந்திய தேர்தல்களும் அதன் பயணத்தையும் ஒன்றுமேயில்லை எனச் சொல்ல முடியாது என்றாலும், இந்தியா British Raj to Billionaire Raj பாட்டையில் செல்கிறதே...எந்த தேர்தல் இதை மனம் கொள்ளும்..

இந்திய சராசரி கூலி அரை ரூபாய் இருந்த போது வைஸ்ராய்க்கு ரூ 750 சம்பளமா என காந்தி கேட்ட கேள்விக்கு பதில் காணப்படாத தேர்தல்களாக 17 கடந்துவிட்டன. 18 வது தேர்தலும் அதே பழகிய பாதையில்தான் செல்ல விரும்புகிறது. வேட்பாளர் சொத்து பத்து விவரங்களும், கிரிமினல் பின்புலங்களும் வழக்கம் போல ADR போன்ற அமைப்புகளால் திரட்டி தரப்படும் . அது சிலரிடம் விவாதப் பொருளாக நடந்து, பின்னர் ஏதுமே நடைபெறாதது போல் கடந்து போகும்.

திரு மோடி அவர்கள் தொடர்ந்து பேச ஆர்வத்துடன் இருக்கலாம். Tired ஆகாமல் பயணித்துக் கூட பேசலாம். கேட்கிறவர் எனக்கு tired ஆகிறது என தேர்தலில் சொல்ல விரும்பி விட்டால் நிலைமையில் சற்று மாறுதல் வரலாம். பிளவு சத்தம் மட்டுப்படலாம்.

ஆனால் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இது ideological war என சொல்லப்படுகிறது. கம்யூனிஸ்ட்கள் நாடாளுமன்றத்தில் போதிய இடங்களை பெறமுடியாமல் இருந்த நிலையிலும் , நாட்டின் அனைத்து கட்சிகளையும் அவர்கள் சோசலிசம் என பேச வைத்தனர். மே தினம் கொண்டாட வைத்தனர். பகத்சிங் இன்குலாப் என முழங்க வைத்தனர்.

இன்று வலது அரசியல் தன் முழக்கங்களை ஆழமாக்கியுள்ளது. அதன் செல்வாக்கு சாயல்களை பல்வேறு கட்சிகளிடம் படர வைத்துள்ளது. தாமும் சிவ பக்தர், இந்துக்களுக்கு நாங்கள் விரோதியா என்கிற defence யை செய்ய வைத்துள்ளது. குங்கும விபூதியுடன் வருகிற அரசியல்வாதிகளை அதிகப்படுத்தியுள்ளது. மைனாரிட்டிகளை போட்டு ரிஸ்க் எடுக்க வேண்டுமா என்கிற விவாதங்களை கட்சிகளிடம் உருவாக்கியுள்ளது. வலதின் ideologyக்கு வாய்ப்பு கொடுக்காத தொலைக்காட்சி விவாதங்கள் அநேகமாக திராவிட மாடல் தமிழ்நாட்டில் கூட இல்லை. அவர்களை தவிர்க்க விரும்பவில்லையா- தவிர்க்க முடியாதவர்களாகியுள்ளனரா ?அவர்களின் Ideological roots என்பது நடந்தேற ஆரம்பித்துள்ளது.

இந்தத் தேர்தல் அதை arrest செய்து stagnate ஆக்குமா என்கிற பதிலைத் தேடுகிறது.

April 11 2024

No one relishes any overdoing (கொடுத்த காசுக்கு மேலே நடிக்கிறது என்கிறோமே அப்படி..எங்கிருந்தாலும் வீடு , பள்ளிக்கூடம், அலுவலகம், அமைப்பு- கட்சிகள், ஆட்சி குறிப்பா பேச்சு- அந்த நடிப்பு காட்டிக்கொடுத்துவிடும்)

I am very tired of Shri Modi's (the PM of India that is Bharath) over speaking , the first doings of him. Though my tiredness is not a matter, I cannot avoid getting the feeling that majority of Indians may have that feeling of his overdoing. This over 'artificially yours' is troubling.

It is difficult to relish any overdoing. Even the good democratic minds in BJP may find the same trouble of keep going with this kind of personality. Whenever a party with some doctrine , turns into a party of hero worship and aggravates its ism thro his will and pleasure, there starts the dooms day of that party. The party which thinks that it can grow and rule, if it has a hero above all, a kind of dictatorial material, then the fall of the party is tied with the fall of the so called hero. Many times the world appreciates the fall also without any regrets.

History of isms with dictatorial tags has pages of this full. If people of India that is Bharath feels strongly 'enough ' , they can add a new page in that history book.

With expectations I am waiting (though expectation fails times a number , wherever it most promises)

நாடாளுமன்ற தேர்தல்கள் கட்சிகளும் காட்சிகளும்

விடுதலை இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் 1952ல் நடந்தது. அத்தேர்தல் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்கிற அரசியல் அமைப்பு உரிமைப்படி நடந்த முதல் தேர்தல். உலக நாடுகள் மத்தியில் இந்தியா தன் மக்களுக்கு கொடுத்த மாபெரும் புரட்சிகர உரிமையது. அவ்வுரிமை இன்றைய நாளில் பல திரிபுகளை, கசடுகளை சேர்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் வயது வந்தோர் வாக்குரிமை என்பது பெரும் புரட்சிகரமான நடவடிக்கை. மேற்கே இதில் பாடம் கற்க வேண்டியிருந்தது.

1952 தேர்தலில் 17 கோடியே 17 லட்சத்து 19 ஆயிரத்து 310 பேர் வாக்காளர் தகுதியில் இருந்தனர். இதில் 10கோடி 61 லட்சத்து 51 ஆயிரத்து 540பேர் வாக்களித்தனர். வாக்கு சதம் 61.81 .

அத்தேர்தலில் 78 கட்சிகள் சார்பிலும், சுயேட்சையாக 533 பேரும் ஆக 1874 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். மொத்த தொகுதிகள் அன்று 489.

காங்கிரஸ் தான் பெரும் கட்சி. அடுத்த நிலையில் சோசலிஸ்ட்கள், கம்யூனிஸ்ட்கள் என அன்று இருந்தனர். காங்கிரஸ் 479 இடங்களில் நின்று 364ல் அபார வெற்றி பெற்றது. வாக்கு சதம் 44.98. சோசலிஸ்ட்கள் 254ல் நின்று 12ல் வென்றனர். வாக்கு சதம் 10.59. கிருபளானி கிசான் மஸ்தூர் 145 இடங்களில் நின்று 9 இடங்களைப் பெற்றது. வாக்கு சதம் 5.79. கம்யூனிஸ்ட் கட்சி 49 இடங்களில் மட்டுமே நின்றாலும் 16 இடங்களில் வென்று இரண்டாவது பெரிய கட்சியாக வந்தது. வாக்கு சதம் 3.29. ஜனசங்கம் 94 இடங்களில் நின்று 3 பெற்றது. வாக்கு சதம் 3.07. அம்பேத்கரின் எஸ்சி எஃப் 35 இடங்களில் நின்று 2 பெற்றது. வாக்கு சதம் 2.38

25 ஆண்டுகளுக்கு பின்னரான 1977 தேர்தல் நிலையைப் பார்ப்போம். எமர்ஜென்சி அனுபவ சூழலில் நடந்த தேர்தல். மொத்த இடங்கள் 542. வாக்கு பதிவு 60.53 சதம்.

ஜனதா 387 இடங்களில் போட்டியிட்டு 280 பெற்று வெற்றியடைந்தது. காங்கிரஸ் 492 இடங்களில் நின்று 154 பெற்றது. இடது கட்சிகள் 143ல் நின்று 33ல் வென்றனர். தமிழகத்தில் அண்ணா திமுக 21ல் நின்று 19 யை பெற்றது. வாக்கு சதமாக அவை 39.32, 34.52, 7.21, 2.95 யை பெற்றனர்.

ஜனதா சோதனை வீழ்ச்சியால் 1980ல் இந்திரா அம்மையார் ஆட்சிக்கு வந்தார். இந்திரா படுகொலை சூழலில் நடந்த 1984 தேர்தலைப் பார்க்கலாம். இத்தேர்தலில்

வாக்குப் பதிவில் முன்னேற்றத்தை காண்கிறோம். 64.11 சதம். காங்கிரஸ் 517 இடங்களில் நின்று 415 யை இந்திய வரலாற்றில் மகத்தான சாதனை படைத்தது. காங்கிரசின் வாக்கு சதம் 48.01. இடதுசாரிகள் 141ல் நின்று 32யை பிடித்தனர். வாக்கு சதம் 9.39. ஜனதா 218ல் நின்று 9யை வென்றது. வாக்கு சதம் 6.57. பாஜக 229 இடங்களில் நின்று 2 யை வென்றது. வாக்கு சதம் 7.40. தமிழகத்தில் திமுக 28ல் நின்று 2 யையும், அதிமுக 12க்கு 12யையும் பெற்றன. வாக்கு சதம் 2.28, 1.59.

இவ்வளவு பிரம்மாண்ட வெற்றி பெற்ற ராஜிவ் தலைமை காங்கிரஸ் 1989 தேர்தலில் தனித்த பெரும் கட்சியாக வந்தாலும் ஆட்சி அமைக்கவில்லை. வி பி சிங் சோதனை நடந்தது.

காங்கிரஸ் 510ல் நின்று 197 யை பெற்றது. வாக்கு சதம் 39.53. பாஜக 225ல் நின்று 85 பெற்று நம்பிக்கையைக் கூட்டிக்கொண்டது. இடதுசாரிகள் 133ல் நின்று 53யை பெற்றனர். செண்ட்ரிஸ்ட் கட்சி, வலது, இடது என அவரவர்க்கு செல்வாக்கான அரசியல் என்கிற நிலை ஏற்பட்டது. ஜனதா தளம் 220ல் நின்று 126 யை பிடித்தது. பிஎஸ்பி 245 இடங்களில் 3 யை பெற்றது. அதிமுக 11க்கு 11 பெற்றது.

1991 தேர்தல் ராஜிவ் படுகொலை சூழல், நரசிம்மராவ் சோதனை நடந்தது. காங்கிரஸ் 505ல் நின்று 244ல் வென்றது. வாக்கு சதம் 36.64. பாஜக 478ல் நின்று 121 ஆக உயர்ந்தது. வாக்கு சதம் 20.04. இடதுசாரிகள் 141ல் நின்று 57 பெற்றனர். வாக்கு சதம் 10.36. நல்ல மரியாதைக்குரிய அரசியல் நிலை கிடைத்தது. அதிமுக 11க்கு 11 பெற்றது.

1996,98 யுனைட்டட் ஃபிரண்ட் கூட்டணி சோதனை நடந்தன.

1999 தேர்தலைப் பார்ப்போம். வாஜ்பாய் என் டி ஏ ஆட்சி - நிலையான ஆட்சி என்கிற வாய்ப்பு பாஜகவிற்கு வந்தது. காங்கிரஸ் 453ல் நின்று 114 பெற்றனர். வாக்கு சதம் 28.30 என வீழ்ந்தது. பாஜக 339ல் நின்று 182யை பெற்றது. வாக்கு சதம் 23.75 தான். திமுக பாஜகவுடன் சேர்ந்து 19க்கு 12யை பிடித்தது. பாமக, எம்டிஎம்கே கட்சிகளும் பாஜகவுடன் இருந்தனர். அதிமுக காங்கிரசுடன் இருந்து 24ல் நின்று 10யை பிடித்தது.

2004, 2009 காங்கிரஸ் வென்று மன்மோகன் சிங் சோதனை நடந்தது. யுபிஏ, என் டி ஏ என மோதினர். 2004ல் காங்கிரஸ் 414ல் போட்டியிட்டு, 145 இடங்களைப் பெற்றது. வாக்கு சதம் 26.44. UPA கூட்டணியில் 20 கட்சிகள், திமுக உட்பட இருந்தன. 221 இடங்கள் 36.43 சத வாக்குகள் கிடைத்தன. என் டி ஏ விற்கு 189 இடங்கள் 35.89 சதம் கிடைத்தது. இதில் பாஜக 364ல் நின்று 138 யை பெற்றது. அதன் வாக்கு சதம் 22.16. அதன் கூட்டணியில் அதிமுக உட்பட 15 கட்சிகள் இருந்தன. இடதுகள் 113

இடங்களில் போட்டியிட்டு 62 இடங்களை வென்று அவர்களுக்கான நல்ல அரசியல் இடத்தைப் பெற்றனர். வாக்கு சதம் 8.11. பி எஸ் பி 435 இடங்களில் போட்டியிட்டு 19யை பெற்றது.

மீண்டும் மன்மோகன் ஆட்சிக்கு உதவிய தேர்தலாக 2009 அமைந்தது. வாக்காளர் 71.70 கோடியைத் தொட்டனர். வாக்கு சதம் 58.20 ஆகத்தான் இருந்தது. காங்கிரஸ் 440ல் நின்று 206 இடங்களைப் பிடித்தது. வாக்கு சதம் 28.55. உடன் இருந்த திமுக 22க்கு 18 யை பெற்று 1.83 சதத்தை வாங்கியது. காங்கிரஸ் கூட்டணி 262 இடங்களைப் பெற்றது.

என் டி ஏ 159 இடங்களை மட்டுமே பெற்றது. பாஜக 433ல் போட்டியிட்டு 116யை பிடிக்க முடிந்தது. வாக்கு சதம் 18.8 என வீழ்ந்தது. இடதுசாரிகள் 177ல் போட்டியிட்டாலும் 24 இடங்களாக ஆக வீழ்ந்தனர். வாக்கும் 7.61 என குறைந்தது. பி எஸ் பி 500 இடங்களில் நின்று 21யைப் பெற்றது.

2014 வலதின் தீவிரத்தை கூட்டிய தேர்தல். மோடி ஆட்சிக்கு வரமுடிந்தது. வாக்காளர் 83 கோடியைத் தொட்டனர். வாக்கு சதம் 66.44 எனக் கூடியது.

காங்கிரஸ் 464ல் போட்டியிட்டு வரலாறு காணாத வீழ்ச்சியாக 44 இடங்களை மட்டுமே பெற்றது. அதன் வாக்கு சதம் 19.31 ஆக குறைந்தது. யுபிஏ 59 இடங்களை மட்டுமே பெற்றது. என் டி ஏ 335 இடங்களைப் பிடித்தது. பாஜக 428 இடங்களில் நின்று தனிப்பெரும்பான்மையாக 282 இடங்களைப் பெற்று அதற்கான புதிய வரலாற்றை உருவாக்கியது. வாக்கு சதமும் 31.

இடதுசாரிகள் 210 இடங்களில் நின்றாலும் அவர்களும் 12 இடங்கள் என வீழ்ந்தனர். வாக்கு சதம் 4.83 என சரிவைக் கண்டது. மேவ மமதா 34 இடங்களைப் பெற்று சாதனை புரிந்தார்.

2019 தேர்தலும் மோடிக்கே வாய்ப்பை திரும்பக் கொடுத்தது. வாக்காளர் 91கோடியாயினர். வாக்கு சதம் 67.40 என கூடுதலாக இருந்தது. என் டி ஏ 352 இடங்களைப் பிடித்தது. பாஜக தன் பலத்தை மேலும் கூட்டிக்கொண்டது. 436 இடங்களில் நின்று 303யை பெற்றது. வாக்கு சதமும் 37.3 எனக் கூடியது. ஜெயலலிதா இல்லா அதிமுக 21ல் நின்று 1யைப் பெற்றது.

யுபிஏ 91 இடங்களை மட்டுமே பெற்றது. காங்கிரஸ் 421ல் நின்று 52 என சற்று தன்னை உயர்த்திக்கொண்டது. வாக்கு சதம் 19.49ல் பெரிய மாற்றமில்லை. திமுக 23ல் 23யையும் பெற்றது.

இடதுகள் பெரும் சரிவைக் கண்டனர். சிபிஅய் 2, சிபிஎம் 3, ஆர் எஸ் பி 1 என கிடைக்கப்பெற்றன.

1984க்கு பின்னரான 40 ஆண்டு அரசியல் மண்டல்- கமண்டல் என்கிற இரு பரிமாணங்களை சுற்றி நடக்கலாயின. ரிஜினலிசேஷன் என்கிற வட்டார அரசியல் தன் பிடிப்புகளையும் கொண்டதானது. இக்காலத்தில் தன் சொந்த பலத்தில் காங்கிரஸ் 1984 யை ஒப்பிடுகையில் அதிகபட்சம் அதில் 50 சதத்தையும், குறைந்த பட்சம் 11 சதத்தையுமே இடங்களாக தக்க வைத்தது. 2024ல் அது 200க்கு மேற்பட்ட இடங்கள் என சொந்த பலத்தைக் காட்டுமா என்பது முக்கியமான கேள்வி. காங்கிரசிர்கு எவ்வளவு இடங்கள் என்பது தான் அடுத்த 5 ஆண்டுகால அரசியலுக்கு முக்கிய கேள்வியாக இருக்கும். இடதுகளும் இந்த 40 ஆண்டுகளில் 60க்கு மேல் என்பதிலிருந்து 6 என்ற நிலைக்கு வந்தனர். இவர்கள் கூடுதலாகப் பெறப்போகும் இடங்களும் வலதின் வெம்மையை சற்று தணிக்கும். பெறுவார்களா எனத் தெரியவில்லை.

பாஜக 400 என்றெல்லாம் பேசிக்கொண்டாலும் அதனால் 2014ல் பெற்ற தனிப்பெரும்பான்மை போல் 272க்கு மேல் பெறுமா என்பது முக்கிய கேள்வி. 272க்கு கீழ் பெற்றாலும் அதிக இடங்களைப் பெறப்போகும் முதல் கட்சி என்றால், ஆட்சி அமைக்க என்ன செய்யப்போகிறது என்பதும் கேள்வி. அப்போது இயல்பாக பிரதமர் மோடியா வேறு எவரா என்பதும் விவாதமாகலாம். மக்கள் இழுபறி தீர்ப்பை தருவார்களா..அல்லது காங்கிரசைவிட மிகக் குறைவாகவே பாஜக பெற்றது என்ற நிலையை உருவாக்கி இந்தியா கூட்டணி ஆட்சிக்கு இடமளிப்பார்களா என்பதை ஜூன் 4 காட்டிவிடும். பார்ப்போம். மக்கள் தங்களுக்கான அரசியல் திசை வழியை எப்படி தேர்ந்தெடுக்கப்போகிறார்கள் என..

April 18 2024

Two psychological narratives are there before the voters.

One is the tall claim of 400 seats by Shri Modi, the fielder making tired of everybody including his party and RSS.

The good counter is by Shri Raghul Gandhi, the emerging star of Indian politics, who is slowly passing out from his novice status, that BJP may end with 150-180.

Debates are going on intensively supporting or opposing the claims and counter claims.

Common sense and poll datas are telling that 400 may be false claim and just a noise, and the counter 150 may be underestimation .

The question before us is how many seats Congress is going to win. That alone will change the direction of the politics. There is no Janata today of that period.

Who is going to come as the single largest party with the magic mark of 272 plus or 272 minus.

What will be the role of President Smt Murmu?

April 24 2024

அன்புள்ள ‘இந்தியா எனும் பாரத ‘ பிரதமர் அவர்களுக்கு

குடிமகனின் வணக்கம். தங்கள் ஆரோக்கியத்திற்கும் வாழ்த்துகள்.

ஆர் எஸ் எஸ் தொண்டராக, பாஜக உறுப்பினர் தலைவராக, குஜராத்தின் முதல்வராக, கடந்த 10 ஆண்டுகளாக பிரதமராக தாங்கள் வளமான அனுபவங்களை பெற்றிருப்பீர்கள். நாட்டின் மூலைமுடுக்கில் உள்ள கோடானுகோடி மக்களை அவர்களது வாழ்நிலை சூழலை, தேவைகளை புரிந்துகொண்டிருப்பீர்கள். உலகத்தின் ஏராள நாடுகளுக்கு சென்ற வகையில் , அந்நாடுகளின் நடைமுறைகளை திட்டங்களை மேம்பாடுகளை பலவீனங்களை தெரிந்துகொண்டிருப்பீர்கள். அந்த அனுபவங்களின் வழியாக இந்தியா குறித்த கனவை மேம்படுத்திக்கொண்டிருப்பீர்கள்.

இந்தியாவின் விடுதலைப் போராட்டம், காந்தியின் அகிம்சை போன்ற அம்சங்களில் தாங்கள் கேடராக வளர்ந்த ஆர் எஸ் எஸ் பயிற்சிக்கூடம் , உள் அரங்க கூட்டங்களில் பல உபதேசங்களை செய்திருக்கக்கூடும். சாவர்க்கர், ஹெட்கேவர், கோல்வால்கர் போன்ற மூலவர்களின் சிந்தனைகள் தங்களைப் போன்ற கேடர்களிடம் படிய வைக்கப்பட்டிருக்கும். ஜனசங்கத்தின் கோட்பாடுகளை வடித்தெடுத்த தீன் தயாள் உபாத்யாய், பின்னர் 1980 களில் பாஜகவை உருவாக்கி வளர்த்த வாஜ்பாய், அத்வானி உள்ளிட்டவர்களும் உங்களைப் போன்றவர்களுக்கு ஆதர்சனமாக இருந்திருப்பர்.

உங்களின் தாய் அமைப்பு ஆர் எஸ் எஸ் , ஜனசங்க- பாஜக கொள்கைகளை நிறைவேற்ற 75 ஆண்டுகளுக்கு மேலாக , உங்கள் அமைப்பினர் போராடி பாஜக மத்திய ஆட்சியை வாஜ்பாய் வழி கண்டீர்கள். அதே காலத்தில் துவங்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இன்னும் அந்த வாய்ப்பை இந்திய மக்கள் வழங்கவில்லை.

விடுதலைக்கு பின்னர் காந்தி படுகொலை, எமர்ஜென்சி போன்ற அசாதரண காலங்கள் நீங்கலாக, மற்ற ஆண்டுகளில் நேரடியாகவும், சில நேரங்களில் ரகசிய முறைகளிலும் சுதந்திரமாக உங்கள் அமைப்புகள் இந்நாட்டில் செயல்படமுடிந்துள்ளது. தாங்களும் 10 ஆண்டுகளாக ஆளமுடிந்துள்ளது.

எந்த ஆட்சியிலும் குறைகள் இல்லாமல் இருக்காது. குறைகள் மட்டுமேயும் இருக்காது. நேரு அவர்கள் துவங்கி , இது பொருந்தும். தாங்கள் ‘நேருவை விஞ்சிய வரலாற்று உருவாக்கம் தேவை எனக் கருதியிருக்கக்கூடும். காங்கிரசை விஞ்சிய ‘பாஜக வரலாற்று உருவாக்கம்’ கடினமான ஒன்று என நீங்கள் கருதியிருக்கக்கூடும். எனவே தனிநபர் ஹீரோ உருவாக்கம் என்கிற short cut யை தங்களை அந்த

ஹீரோவாக முன் நிறுத்தி - personality cult உருவாக்கும் சோதனையை சாதித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

குஜராத்தை இந்த நாயக வழிபாட்டிற்கான தியேட்டராக்கி, அதில் கிடைத்த தேர்தல் வெற்றி, கட்சி அங்கீகாரம் ஆகியவற்றைக் கொண்டு, பாரத சோதனையை மேற்கொண்டீர்கள். Hero worshipக்கு உகந்த கட்சி கட்டமைப்பை, அமைச்சரவையை, நிறுவனங்களை, மீடியா கட்டமைப்பை மிக சாமர்த்தியமாக செய்துள்ளீர்கள்.

ஆர் எஸ் எஸ் பாஜக தொண்டர்களுக்கு தங்களின் 'சித்தாந்த அமுலாக்க நாயகன்' என்கிற காரண்டியை கடந்த 10 ஆண்டுகளில் தந்துள்ளீர்கள். விவரம் தெரிந்த சிலர் அங்கும் too much , unbearable எனச் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் எடுபட்டிருக்கமாட்டார்கள். அவ்வளவு அசுர பலத்துடன் , சங்க் பரிவார் அமைப்புகளை உங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளுக்காக நிற்க வைத்து இன்றுவரை மாபெரும் வெற்றி பெற்றுள்ளீர்கள். உங்கள் மனதில் கூட தங்களின் attitude ஒருவகையிலான authoritarianism என எப்போதாவது தோன்றினாலும், அதை பொருட்படுத்தாமல், மேலும் மேலும் unbeatable man imageயை, மிகக் கவனத்துடன் கட்டி வருகிறீர்கள்.

இந்தியர் அனைவரும் சமமாக வாய்ப்புகளை பெறவேண்டும்- எவருக்குமான தனி community appeasement கூடாது என உங்கள் அமைப்பினர், உங்களுக்கு முன்பிலிருந்தே பேசிவருகின்றனர். சிறுபான்மையினர் மட்டுமே கொண்டதல்ல ஒரு நாடு , அப்படி பேசுவது செக்யூலரிசம் அல்ல என்பதை புரிந்துகொள்ளமுடியும். ஆனால் சிறுபான்மையினர் என்கிற தனி கேடகரி குறிப்பாக 'முஸ்லிம் என்கிற கேடகரி' பார்வையிலேயே இருக்கக் கூடாது என நினைக்கும் 'இந்துத்துவா அரசியலை ' தாங்களே படைத்தளபதியாக முன் நின்று செய்வது , இந்தியா விடுதலைக்கால அரசியலில் புதிதாக இருக்கிறது.

பிரதமர் என்கிற அரசியலமைப்பு சட்டப்படியான பதவி, பொறுப்பு - மிக அபூர்வமாக இந்திய குடிமகன் ஒருவருக்கு வாய்க்கக்கூடியது. பெரும் மரியாதைக்கும் , நல் மதிப்பிற்கும் , அனைவரின் நல் எண்ணத்திற்கும் உரிய அற்புதமான ஜனநாயகப் பொறுப்பு அப்பதவி. 140 கோடி இந்தியர்களும் ஒரு சேர நின்று , பிரதமர் தங்களுக்கானவர் என்கிற பாத்தியதை உணர்வை உண்டாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நிறைந்த ஆக உயர் அரசியல் நிலை. அரசியல், பொருளாதார, சமூக மதிப்புகளையும் , தார்மீக நெறிகளையும் கோடானுகோடி மக்களிடம் ஓர் இன்ச் அளவாவது உயர்த்தும் பொறுப்பது. இத்தகைய 'பாத்தியதை' உணர்வை தங்களால் உருவாக்க முடிந்துள்ளதா என்பதை ஆத்ம சுத்தியுடன் தாங்களும் , தங்கள் அமைப்புகளும் சிந்திக்க வேண்டுமென பணிவுடன் வேண்டுகிறேன்.

மொழி அடிப்படையில் , மத அடிப்படையில், இன சாதி வர்க்க அடிப்படையில் சிலரை பிறர் ஆக்கி - demonising and creating the otherness என்பது இந்திய அரசியலில் பிரிட்டிஷ் காலத்திலிருந்தே தீவிரம் கொண்டுள்ள அரசியல் செயல்பாடுகளாகவே இருக்கின்றன. இந்திய அரசு- மாநில அரசு என்கிற இரு அரசு முறை மோதல் விடுதலைக்குப் பின்னரான அரசியல் மோதலாக வலுத்து வருகிறது.

விடுதலை கால போராட்டத்தில் இந்தியா என்கிற பேரடையாளத்துடன் தேவைப்பட்ட centralised top down politics என்பது, விடுதலைக்குப் பின்னரான தேர்தல் மய்ய அரசியலில் regionalisation of Indian politics, வட்டார அரசியல் என நிலைக்கொள்ளத்துவங்கியது. நேரு, இந்திரா, ராஜிவ் கால centralised என்பது ஓரளவு நரசிம்மராவ், மன்மோகன் காலத்தில் சற்று பலம் குன்றிப் போனது. ராகுலின் இக்காலத்தில் அவர் வட்டார அரசியலின் பலத்தை நம்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காங்கிரசின் இந்த அரசியல் பயணத்தில் ஏக இந்திய அரசியல் என்பதிலிருந்து , வட்டார அரசியல் பலத்துடன் என்கிற நிலையை அவர்கள் எட்டிவிட்டனர். கம்யூனிஸ்ட்களும் தங்களின் ஏக இந்திய அரசியல் சோதனையில் வெல்ல முடியவில்லை. மே வ , கேரளா வட்டார அரசியல் சோதனைகளில் நின்றுபோக வேண்டியதாயிற்று.

பிரதமர் அவர்களே , உங்களின் மூதாதையர் ஏக இந்து பெரும்பான்மை இந்தியக் கனவைக் கொண்டவர்கள். அதற்கான சக்கரவியூகத்தில் எப்போதும் போர் என்கிற முரசை அடித்துக்கொண்டேயிருப்பவர்கள். இந்த முரசை தளபதியாக நின்று தாங்களே அடிக்க பெரு விருப்பத்துடன் இருக்கிறீர்கள். தங்களின் முழு ஆற்றலையும் அப்படியொரு 'இந்துக்களின் இந்தியா' Hindu kingdom என நிறுவ சங்க நாதம் செய்கிறீர்கள். எதிரியை சித்தரித்து, அனைத்து இந்துக்களையும் முடிந்தால் அக்னிவீரர்களாக்க முயற்சிக்கிறீர்கள். போர் என்றால் சேதாரம், வளர்ச்சி இருக்காது என்பதை ஆட்சியிலிருக்கும் தங்களைவிட எவர் நன்றாக உணரமுடியும். இந்த கற்பனையான எதிரி உருவாக்கமும், போர் முஸ்தீபுகளும் அவசியமா என சிந்திக்க வேண்டுகிறேன்.

இன்னும் 5 ஆண்டுகளுக்கு கோடானு கோடி மக்களுக்கு ரேஷன் அரிசி கொடுக்கவேண்டிய நிலையில்தான் நம் நாடு இருக்கிறது. இன்னும் சில இலவசங்களை சலுகைகளை supportive ஆக கொடுக்கவேண்டிய நிலையில் தான் மக்கள் வாழ்நிலை இருக்கிறது. வேலையின்மை என்பது இந்தியாவில் எப்போதுமே பிரச்சனையாக இருக்கிறது. பல கிராமங்களில் வாழ்க்கை முன்னேற்றம் என்பதை காணமுடியுமா என்கிற ஏக்கமே இருக்கிறது. குழந்தை பெண்கள் ஆரோக்கிய குறியீடுகளும் கவலைத்தரத் தக்க அளவில்தான் இருக்கின்றன. கோடிக்கணக்கான உழைப்பாளர்கள் இருந்தும் இன்னும் நாம் நோஞ்சான் குடியரசாகவே இருக்கிறோம்.

ஆக உயர் பில்லியனர், கோடீஸ்வரர்கள், மில்லியனர்கள், இலட்சாதிபதிகள், சொத்தாதிபதிகள் என 20 கோடி அல்லது சற்றுக்கூட இருக்கலாம். இது பெரிய மார்க்கெட் இல்லையென சொல்லவில்லை. அடித்தட்டு 20 கோடி மிக அவல நிலையில் இருக்கிறார்கள். மீதமுள்ள 80-100 கோடி தனவந்தர்கள் அல்ல. கைக்கும் வாய்க்குமான போராட்டத்தை நடத்துபவர்கள்.

இந்திய மக்களில் எவர் எந்த தட்டில் எவ்வளவு எண்ணிக்கையில் உள்ளார்கள் என்பதை பிரதமர் என்கிற பொறுப்பில் மற்ற எவரையும் விட தாங்களே நன்கு அறிந்திருக்க முடியும். 5 அல்லது 10 ஆண்டுகளில் இவற்றையெல்லாம் மாற்ற முடியும் என்கிற magic wand எவரிடத்தும் இல்லை. மக்கள் நம்பிக்கைகளை மதிக்கிறோம் என்கிற பெயரில் ஆலயம், மசூதி, சர்ச் , சிலைகள் கட்டுவதில் மட்டும் பிரச்சனைகள் தீர்ந்துவிடாது என்பதை தாங்கள் அறியாமல் இருக்கமுடியாது.

இந்தியாவில் இச மோதல்கள் என்பதை சற்று தள்ளி வைத்துவிட்டு கோடானுகோடி மக்களுக்கான welfare economics, planning என்பதில் விவாதங்களை கவனப்படுத்த வேண்டிய தலையாய பொறுப்பு, பிரதமர் என்கிற வகையில் தங்களுக்கே இருக்கிறது. விவாத தரத்தை உயர்த்த வேண்டிய பொறுப்பும் தங்களுக்கே கூடுதலாக இருக்கிறது. இந்திய மக்களின் ஆக விஸ்தார ஒற்றுமையை உருவாக்கி பலப்படுத்த வேண்டிய விவாதங்களை தாங்கள் முன்னெடுக்க வேண்டிய கடமை இருக்கிறது எனத் தோன்றுகிறது.

இன்னும் வரக்கூடிய தேர்தல் நாட்களில் தங்கள் உரைகள் என் போன்றவர்களை வழக்கமான பேச்சினால் tired ஆக்காமல், உயர்வான நெறி சார்ந்து இருக்க வேண்டுகிறேன்.

உங்கள் மொழியில் என்னால் இதை எழுத முடியாமைக்கு வருந்துகிறேன்.

அன்புடன் மரியாதையுடன்

இந்திய குடிமகனாக ஆர் பட்டாபிராமன்

24-4-2024

April 26 2024

திபங்கர் பட்டாசார்யா சிபிஎம் எல் லிபரேஷன் பொதுச்செயலர். அவரது பேட்டி மெயின்ஸ்ட்ரீம் இதழ் ஏப்ரல் 20,2024ல் வந்துள்ளது. வினோத்மிஸ்ராவை அடுத்து அக்கட்சியின் பொதுச்செயலராக மிக இளம் வயதில் திபங்கர் பொறுப்பேற்றார். வர்க்கப்போராட்டம் குறித்த கேள்வியும் கேட்கப்பட்டிருந்தது. அதற்கு அவர் அளித்த பதில்

I think 'class struggle' remains a much misunderstood concept in India. Class struggle is the struggle of the exploited and oppressed classes against the dominant class power which controls the state, the economy and also dominates in the realm of ideas. The caste system and patriarchy are two key pillars of this class power in India. If class power permeates all spheres of social life, struggle against the dominant class power will also have to challenge every aspect of that domination.

We can broadly classify politics in three or four broad categories. The dominant politics has been the 'politics of management', managing the existing order. In a despotic dispensation, this management takes place through all-out suppression, through erosion and decimation of democracy. This is what we are experiencing today in Modi's India.

Against this politics of management we uphold what you may call the politics of transformation. There is also the popular politics of representation. In a vast and diverse country like India, and in a society like ours with a deeply entrenched caste order and consequent pattern of social exclusion, marginalisation and oppression, politics of representation also acquires a transformational aspect.

Class struggle has to be grasped and pursued in this dynamic and live political context. Marxism has never seen class struggle as mere economic struggle. Politics is ultimately the concentrated expression of economics, but in class struggle, Marxism places politics in command and combines diverse components and dimensions of struggle – economic and social, cultural and political – in an integrated framework of class struggle.

அடுத்த ஒரு கேள்வி காங்கிரஸ் எதிர்ப்பு என்பதில் துவங்கிய உங்களைப் போன்ற சிறிய கட்சிகளின் அரசியல் பயணத்தில் தடைகள் என பார்க்கும் அனுபவங்கள் குறித்தது. மேலும் பாஜக வளர்ச்சி என்பதைப் பற்றி..அதற்கு திபங்கர் கொடுத்த பதிலிலிருந்து..

The saffron agenda has been on the ascendant for almost four decades. The shift in India's economic and foreign policies since the early 1990s only helped this rise. Today the Sangh brigade has emerged not just as an aggressive champion of Hindutva, but also as the staunchest supporter of corporate power and a pro-US pro-Israel foreign policy.

No single party or ideology that has grown organically in India in the course of the freedom movement or in the post-independence decades is in a position to independently defeat this fascist offensive. We need an effective and dynamic united front. All major ideological streams and political trends will have to find ways to deal with this situation and answer the challenge

தேர்தல் அரசியலின் எதிர்காலம் என்ன என்கிற கேள்விக்கு திபங்கர்

A multiparty parliamentary democracy and a more or less credible track record of five-yearly elections have been the two basic features of India's flawed democracy. Ambedkar was forthright in indicating the contradictions that would continue to haunt India's Constitution – the contradiction between the equality of one vote for every citizen and the massive inequality in social and economic realms. Mounting social and economic inequality would render electoral equality meaningless beyond a point.

In India, even the electoral system has now started becoming dysfunctional – the combination of a compromised Election Commission, unmitigated corporate funding through opaque electoral bonds, non-transparent system of electronic voting machines, and a propagandist media has greatly eroded the credibility of India's elections.

These elections are perhaps India's last chance to check democratic India's descent into an electoral autocracy.

10 ஆண்டுகளுக்கு முன்னர் தோழர் குருதாஸ்தாஸ்குப்தா முக்கிய கருத்தொன்றை அச்சப்படத் தக்க வகையில் வெளிப்படுத்தினார். அப்போது அவர் எதிரில் தோழர் எஸ் எஸ் ஜி , பட்டாபி உட்பட சிலர் இருந்தோம். வலதின் தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கும் என்றார். எங்களால் அதை உள்வாங்கி உறைய வைக்கமுடியவில்லை. ஏன் இப்படிச் சொல்கிறார் எனப் பேசிக்கொண்டோம்.

இந்த தேர்தலில் திபங்கர் கடைசி பாராவில் சொல்லும் last chance to check India's descent into an electoral autocracy என்பது பலராலும் இன்னும் அதிகமாக அச்சத்தை மிக அதிகமாக்கும் வகையில் பேசப்படுகிறது. தலைமை தாங்கி தடுக்கவேண்டிய சக்தி கொண்ட காங்கிரசே இந்த அச்சத்தை அதிகமாக்குவதைப் பார்க்க முடிகிறது . ஏன் எல்லாம் முடிந்துவிடும் இனி இரங்கற்பா தான் என்கிற அவநம்பிக்கை அதிகமாகி வருகிறது எனத் தெரியவில்லை. மக்கள் ஏராள இழப்புகளை சந்தித்தாவது ஹிட்லர் போன்றவர்களை முடிவிற்கு கொண்டு வந்த வரலாறும் இருக்கிறதே. எச்சரிக்கை என்பது அவநம்பிக்கை இரங்கற்பா என ஆக வேண்டுமா எனத் தெரியவில்லை.

எங்கள் தொழிற்சங்கத்தில் இப்படி ஓவர் பயமுறுத்தல் செய்த அனைவரையும் தோழர் குப்தா கடுமையாக எதிர்கொண்டு, சக தோழர்களுக்கு நம்பிக்கை தந்தே பலவற்றை சாதித்தார் என்பதை இந்நேரத்தில் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

april 29 2024

A Fact Sheet on Communist movement

இந்தியாவில் கம்யூனிஸ்ட்களின் அனுபவம் என்பது மகத்தானது. பொருட்படுத்த தக்கது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே ' விடுதலையுடன் சோசலிச இந்தியா' என்பதற்கான கனவுடன் அவர்கள் கட்சி அமைத்துக்கொண்டனர்.

ஆங்காங்கே சிறு குழுக்களாக இருந்தபோதிலும் சோவியத் பிரிட்டிஷ் தோழர்கள் உதவியுடன், சில நேரம் மேற்பார்வையுடனும் அவர்கள் தங்கள் சக்திகேற்ப மக்களை திரட்டினர். கம்யூனிசம், சோசலிசம், வர்க்கப்போராட்டம், பூர்ஷ்வா, ஏகாதிபத்தியம், புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், இயக்கவியல், உபரிமதிப்பு , சோவியத் அக்டோபர் புரட்சி போன்ற இந்தியர்களுக்கு அதுவரை பழக்கமாகாத சில புதிய சொல்லாடல்களை அதற்கான விவரிப்புகளை அவர்கள் தரலாயினர். மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் என்கிற பெயர்களையும் அவர்கள் விஸ்தாரமாக்கினர்.

மக்களிடம் செல்வாக்குப் பெற்ற மகத்தான காந்தி, மேற்கின் பெருமைகளை சோசலிச சிந்தனையை அறிந்த நேரு , இவர்களுடன் ஆங்காங்கே புகழ்வாய்ந்த இன்ன பிற காங்கிரஸ் தலைமையை இவர்கள் இளைஞர்களாக எதிர்கொண்டனர். ரஷ்யாவைப் போல் தொழிலாளர் விவாசாயிகள் இன்ன பிற சக்திகளை திரட்டி சோசலிச புரட்சி இந்தியாவில் சாத்தியம் என்கிற நம்பிக்கை அவர்களை ஊக்குவித்து செயல்படவைத்தது. சதி வழக்குகளில் தண்டனைகள் பெற்றனர். உயிர் பலிகளும் கொடுத்தனர். பெரும் படிப்புடன் வந்த சில இளைஞர்கள் சொத்துக்களை இழப்பதைப் பற்றி கவலை கொள்ளாமல் , வேலை சம்பாதித்யம் என்கிற சுயநலம் ஏதுமின்றி சர்வ அர்ப்பணிப்பிற்கும் தங்களை முன் வைத்துக்கொண்டனர்.

தொழிற்சங்கம், விவசாய சங்கம், இளைஞர் மாணவர் அமைப்புகள், கலை இலக்கிய அமைப்புகள், பெண் அமைப்புகள் என வெகுஜன ஸ்தாபன முறைகளை கையாண்டனர். கட்சிக்குள் ஓயாத விவாதங்களை மேற்கொண்டு , தலைமறைவு வாழ்க்கை உட்பட சோதனைகளை செய்துகொண்டனர். பொலிட்ப்யுரோ , மத்திய கமிட்டி அமைத்து புதிய புதிய தலைமை சோதனைகளை party of new type என்கிற லெனினிச வழியில் செய்து பார்த்தனர். பூர்ஷ்வா பெரும்பான்மை ஜனநாயகம் என்பது போலி என நிராகரித்து வந்தனர். ஜனநாயக மத்தியத்துவம், மேலிருந்து கீழ் கட்டுவது, விமர்சனம் சுய விமர்சனம் என்கிற அமைப்பு குறித்த சோதனைகளை செய்தனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், காந்தியம் , காங்கிரஸ் நிலைப்பாடுகள் குறித்து தங்களது எதிர் உரையாடல்களையும், கடும் விமர்சன விவாதங்களையும் தங்கள் அணிகள் மத்தியில் கொண்டு சென்றனர். சென்னை ராஜதானியில் குறிப்பாக தமிழகப்

பகுதியில் காங்கிரசை மட்டுமல்லாது, நீதி கட்சி-சுயமரியாதை இயக்கம் - திக குறிப்பாக பெரியார் உடன் விவாதங்களை மேற்கொண்டனர்.

வர்க்கம் என்கிற அவர்களது புதிய சொல்லாடலை மக்கள் அறிவதற்கு முன்னர் இந்திய சமூகத்தில் ஆழமாக புரையோடிருந்த சாதி, மதம் சார்ந்த பிரச்சனைகளை அவர்கள் எதிர்கொண்டாலும், சோசலிச சமுதாயம் அவைகளை மூடிவிடும் என்கிற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சாதி மதம் குறித்த உரையாடல்களை வைத்து இயக்கமாக மக்களைத் திரட்டிய முஸ்லிம் லீக், இந்து மகாசபா, ஆர் எஸ் எஸ், அம்பேத்கர், நீதிகட்சி பெரியார் என இவர்கள் எல்லோரும் , அவரவர் அறிந்த தங்களின் நியாயங்களின்படி விடுதலை போராட்டத்தின் தீவிரத்திலிருந்து தள்ளியும், பிரிட்டிஷ் ஆட்சி குறித்த தீவிர விமர்சனங்களின்றியும் இருந்ததை கம்யூனிஸ்ட்கள் விமர்சித்து வந்தனர். காங்கிரசின் எதிர்ப்பும் தீவிரமில்லாமல் சமரச வழியில் இருப்பதாக கம்யூனிஸ்ட்கள் விமர்சித்தனர். ஆயுத வழி போராட்டம் என்பதில் நம்பிக்கை இருந்ததால் பகத்சிங் போன்றவர்களை உயர்த்திப்பிடித்தனர்.

சோவியத்தும் பங்கேற்ற இரண்டாம் உலகப்போர் கால '1942 குவிட் இந்தியா ' போராட்டத்தில் மேற்கூறிய சக்திகள் எவையும் பங்கேற்கவில்லை. இதில் ராஜாஜியும் இருந்தார். மக்கள் யுத்தம் என்கிற பெயரில் கம்யூனிஸ்ட்களாலும் அப்போராட்டத்திற்கு ஆதரவான நிலை எடுக்கமுடியவில்லை.

இந்தியா பாகிஸ்தான் என்கிற பிரிவினையுடன் பிரிட்டிஷ் ஆட்சி விலகியது. வந்தது விடுதலை தானா என்கிற சந்தேகம் கம்யூனிஸ்ட்களிடம் இருந்தது. ஆட்சி மாற்றம்தான் என்றனர். மாபெரும் காங்கிரஸ் இயக்கம் அதன் தலைவர்கள், காந்தி என உரையாடலை மேற்கொண்ட ஜோஷியின் தலைமை மாற்றப்பட்டு, விடுதலை இந்திய நுழைவுக்காலத்தில் ரணதிவே தலைமை சோதிக்கப்பட்டது. பின்னர் அது ஆந்திர ராஜேஸ்வரராவ் தலைமையாகி, அஜாய்கோஷ் என தன்னை சற்று ஸ்திரப்படுத்திக்கொண்டது.

தேர்தல் பங்கேற்பு, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் கைவிடுதல், பல கட்சி ஆட்சி முறை ஏற்பு என்கிற நிலைப்பாட்டிற்கு கம்யூனிஸ்ட்கள் நகர்ந்தனர். நேருவின் ஆட்சி, காங்கிரஸ் குறித்த நிலைப்பாட்டில் உட்கட்சி விவாதங்கள் பெருகலாயின. பாராளுமன்ற செயல்பாட்டின் அவசியம்- parliamentarism ஆகியவை குறித்த விவாதங்கள் எழுந்தன.

ஸ்டாலினுக்கு பின்னரான சோவியத் - மாவோ தலைமையிலான சீன வேறுபாடுகள் கம்யூனிஸ்ட்களிடம் மாபெரும் விவாதங்களை கிளப்பின. சீன படையெடுப்பு , நேரு

பலவீனமாதல் என்கிற அரசியல் காட்சிகளின்போது , கட்சிக்குள் சூடான விவாதங்கள் நடந்தேறி, தோழமை இற்றுப்போய், கட்சி உடைவை சந்தித்தது.

கம்யூனிஸ்ட்கள் நாளடைவில் சிபிஅய், சிபிஎம் என்கிற இரு பெரும் பிரிவுகளுடன், எம் எல் நக்சல் என்கிற குழுக்களுடன் அவரவர் செல்வாக்கு பகுதியில் செயல்படத் துவங்கினர். புரட்சி குறித்து தனித்தனி திட்ட ஆவணங்களை எழுதிக்கொண்டு, அவரவர் புரிதலே மார்க்சியம், மார்க்சிய லெனினியம் என்றனர். மார்க்சிய லெனினிய மாவோயியம் சரி என்கிற குழுக்கள் தீவிரமாயினர்.

காங்கிரஸ் எதிர்ப்பு, காங்கிரசுடன் இணக்கமாக இந்திய வளர்ச்சியை கட்டுதல் என்ற தேர்தல் வழி சோதனைகள், எமர்ஜென்சி சோதனைகள் நடந்தன. பேயுடன் சேர்ந்தாவது காங்கிரஸை வீழ்த்துவது என்கிற ஜனதா (ஜனசங் உட்பட) சோதனையின் தோல்வியும் உணரப்பட்டது. பதிந்தா, ஜலந்தர் எனக்கூடி இடதுசாரி ஜனநாயக மாற்று என இடதுசாரியை முன்வைத்து, பூர்ஷ்வா கட்சிகள் நிராகரிப்பு என்கிற முழக்கங்கள் எழும்பின.

சோவியத் வீழ்ச்சி நம்பிக்கையிழப்பை தந்தாலும், இந்திய கம்யூனிஸ்ட்கள் சுதாரித்து எழுந்தனர். பல நாடுகளில் கம்யூனிஸ்ட் என்கிற கட்சிப் பெயர் நீக்கம் நடந்தாலும், இங்கு உறுதியாக அந்த வீழ்ச்சியின் எதிர்மறைகளை தைரியமாக கம்யூனிஸ்ட்கள் சந்தித்தனர். சோவியத் வீழ்ச்சி சோசலிச மாடல் ஒன்றின் தோல்வி என்கிற புரிதலை எடுத்துச் சென்றனர்.

இந்திய அரசியல் மண்டல்- கமண்டல் என்கிற சாதிய மதம் சார்ந்த தீவிர சொல்லாடல்கள் பக்கம் நகர்ந்தது. மார்க்ஸ் லெனின் காந்தி நேரு என்கிற பெயர்கள் பின்னுக்கு போகலாயின. அம்பேத்கர் பெரியார் பெயர்கள் தவிர்க்கமுடியாதவையாயின. கமண்டல் அரசியலின் ஆபத்தை கம்யூனிஸ்ட்கள் தீவிரமாக உணர்ந்தனர். மே.வ, கேரளா, திரிபுரா மாநில ஆட்சி அனுபவங்களை தந்தது. 'ஏக தேசிய அரசியல் எதிர் வட்டார அரசியல் ' என்பது தீவிரமானது. இதில் திமுக தலையாய பங்கையாற்றியது. ஜெயலலிதாவின் அதிமுக வட்டார அரசியலும் தன் சுயமரியாதைக்காக நின்றது.

இந்திரா படுகொலை, ராஜிவ் படுகொலை, coalition politics, குறைந்தபட்ச செயல்திட்டம் என்கிற சோதனைகள் நடந்தன. கம்யூனிஸ்ட்களுக்கும் இந்த சோதனைகளில் dignified role இருந்தன. மத்திய ஆட்சியில் வட்டார கட்சிகளின் பங்கேற்பு நடக்கலாயின. இதில் காங்கிரஸ்- பாஜக என்கிற சோதனைகளை வட்டார கட்சிகள் நடத்திப்பார்த்தன.

வலதுசாரிகள் இந்திய அரசியலில் முதன்முறையாக மத்திய ஆட்சியை வாஜ்பாய் மூலம் சோதித்து தங்களால் முடியும் எனக் காட்டலாயினர். மன்மோகன் சிங்

என்கிற soft Govt சோதனைக்குப் பின்னர் 'மஸ்குலின் பாடிபில்டர்' ஆட்சி என்கிற குறியீடுகள் 'வளர்ச்சி' என்கிற பதத்துடன் பாஜக மோடி ஆட்சியை உருவாக்கின.

விடுதலை இந்திய அரசியல் 'ராட்சச காங்கிரசை ' வீழ்த்துவது என்பதில் துவங்கி 'அதிராட்சச பாஜகவை ' வீழ்த்துவது என்கிற சோதனையில் நுழைந்துள்ளது. காங்கிரசுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்கிற பேச்சுக்கள் நின்றுபோயுள்ளன. கேரளா விதிவிலக்கு.

கமண்டலுக்கு எதிரானது மண்டல்தான் என காங்கிரசும் வட்டார அரசியலின் வெற்றிச் சோதனைகளை அங்கீகரிக்க் வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. கம்யூனிஸ்ட்களுக்கும் அதுவே பாதை என்கிற தீவிரம் உணரப்பட்டுள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு என்கிற முழக்கம் இந்துத்துவாவிற்கு மாற்றாகியுள்ளது. அதன் விளவுகள் புதிய அனுபவங்களை நாட்டிற்கும், அமைப்புகளுக்கும் தரலாம். பலன் எனில் சாதி சென்சஸ் படி என்பது தீவிரமாகலாம்.

இந்திராவே இந்தியா என்கிற overdoing இன்று மோடி காரண்டி- மோடி மோடி என்கிற பெரும் இரைச்சலாகியுள்ளது. இனியும் மோடி எனில் நாடு தாங்காது என்கிற வேகம் கூடியுள்ளது. கம்யூனிஸ்ட்கள் இந்த பெரும்கூட்டணியில் தங்களுக்கான சிறிய spaceயை வைத்துக்கொண்டு செயலாற்றி வருகின்றனர். வட்டார அரசியல் பின்புலத்தில், தேசிய அடையாளங்களைக் கொண்ட சற்று பலம் மிகுந்த காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் புதிய சோதனைகளுக்காக காத்து நிற்கிறார்கள்.

இந்த 2024 தேர்தலில் பாஜக வீழ வேண்டுமெனில் 'காங்கிரஸ் எவ்வளவு ' என்பது மிக முக்கியமானதாக இருக்கும். 'வட்டார கட்சிகளின் நெருக்குதல் எவ்வளவு கண்ணியமாக இருக்கும்' என்பதும் பேசுபொருளாக இருக்கும். மாற்று சோதனை என்பதில் கம்யூனிஸ்ட்கள் பெறப்போகும் அனுபவமும் அவர்களுக்கும், தேசிய அரசியலுக்கும் முக்கியமானவையாக இருக்கும். பார்க்கலாம்... மார்க்ஸ் காந்தி நேரு மீட்சி பெறுவார்களா - அவர்களுக்கான rehabilitation காலத்திற்காக இந்தியா காத்திருக்க வேண்டுமா ? தேர்தல் அரசியலுக்கு அவர்கள் தேறமாட்டார்களா?

May 4 2024

ஆர் எஸ் எஸ் ஆண்டறிக்கை ஒன்றை 2023-24 படிக்க நேர்ந்தது. அடுத்து அதன் தலைவராகப்போகிறவர் எனக் கருதப்படுகிற பொதுச்செயலர் திரு தத்தரேய ஹோசபலெ அறிக்கையை வைத்துள்ளார். ஆர் எஸ் எஸ் என்ன செய்தது, எவற்றை திட்டமிடுகிறது என்பதை ஓரளவிற்காவது இவ்வறிக்கை வெளிப்படுத்தும்.

இதற்கு முந்திய ஆண்டுகளில் சினிமாத்துறை ஆளுமைகள் சந்திப்பை அது ஏற்படுத்தி அவர்களிடம் தங்கள் எதிர்பார்ப்பை தெரிவித்தது ஆர் எஸ் எஸ் -என்ற செய்தியை வெளிப்படுத்தியிருந்தேன். பின்னர் வந்த பல சினிமாக்கள், ஓடிடி சீரிஸ் எல்லாம் தங்கள் இந்தியரின் மஸ்குலின் தனத்தை, போர் வெற்றியை, திறம்பட தாக்குதல் செய்வதை, அதீத தேசப்பக்தியை வெளிப்படுத்தி வரத்துவங்கின. ஆர் எஸ் எஸ் அரங்கிற்குள் என்ன பேசுகிறார்கள் என்பது ஒருவருக்கு தெரியாமல் போகலாம். ஆனால் அவர்கள் வெளியிடும் அறிக்கைகளை காணத்தவறுவது, அலட்சியமாக கடந்து போவது சரியானதா எனத் தெரியவில்லை. அவர்கள் வேலைப்பாங்கை ஓரளவிற்கு இவ்வறிக்கை மூலம் அறியலாம்.

2025ல் அவர்கள் நூற்றாண்டு கொண்டாட இருக்கிறார்கள். 5 வகை மாற்றங்கள் என ஹிந்தியில் நாமகரணம் சூட்டி அதற்காக வேலைத்திட்டம் என்கிறார்கள்.

அவர்களுடைய ஷாகாக்கள் 2023ல் 68651- 2024ல் 73117 என உயர்ந்துள்ளது. இதை மேலும் அதிகரிக்க வேண்டுமாம்.

உலக இந்து மாநாடுகள் 2023ல் பாங்காக் தாய்லாந்தில் நடத்தியுள்ளனர்.

கௌஹாத்தியில் முன்னாள் பிரச்சாரக் கூட்டம் ஒன்று நடத்தி experience narration and dialogue என்பதைச் செய்தனர்

பாஞ்சன்யா வார இதழ் சார்பில் எழுத்தாளர் அமர்வு ஒன்றை செப் 2023ல் ரிஷிகேஷில் நடத்தினர்

விவேகானந்தர் பிறந்த நாளில் இளைஞர்களை திரட்டி கல்கத்தாவில் lectures

Ancient Culture and Traditions என்பதின் 8 வது மாநாட்டை ஜனவரி 2024ல் திப்ருகரில் நடத்தினர்.

குஜராத்தில் விளையாட்டுத்துறை ஒர்க்ஷாப் ஒன்றை ஆர் எஸ் எஸ் காரர்களுக்கென 2023ல் நடத்தினர்.

மாநில வாரியாக பணிகளை பட்டியலிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் வெள்ளக் காலத்தில் நிவாரணப்பணிகள் செய்தவை பற்றியும், தூய்மை தூத்துக்குடி என்கிற பணி செய்ததையும் சொல்கின்றனர்.

புனே நகரில் வர்த்தக சபை சார்பில் Philisophy of India's Economic policies என்கிற செமினார் ஒன்றை செய்துள்ளனர்.

Literary Festivals என நகர்களை தேர்ந்தேடுத்து நடத்தி வருகின்றனர். ஆர் எஸ் எஸ் பிரசுரங்கள் விற்பனை இயக்கம்.

கிராமங்களை நோக்கி கிராம காரியம் ராம காரியம் என்கிற முழக்கத்துடன், மக்களை சந்தித்தல் பிரச்சனைகளை அறிதல், folk dance போன்ற நடவடிக்கைகள்- 10 கிராமங்களுக்கு cluster- self reliance employment போன்றவற்றை சோதித்தல்

மதம் மாறியவர்களுக்கு இட ஒதுக்கீடு சலுகை கூடாது என்கிற எதிர்ப்பு இயக்கம் கட்டுதல். 4500 அமைப்புகளின் சார்பில் அரசாங்கத்திடம் குரலை எழுப்புதல். இதைத்தான் ,ஆர் எஸ் எஸ் எடுத்த இந்த முடிவைத்தான் பிரதமர் உட்பட பாஜக தலைவர்கள் 2024 தேர்தல் உரையில் அழுத்தமாக கொண்டு செல்கின்றனர்.

103 நாடுகளைச் சார்ந்த 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களிலிருந்து 6 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் ஆன்லைனில் பங்கேற்ற சுற்று சூழல் சார் போட்டிகளை நடத்தியது

தேசத்திற்காக மரம் ஒன்றை வைப்பீர் என்கிற இயக்கத்தை நடத்தியது

அக்டோபர் 6 2023ல் வைக்கம் சத்தியாகிரக நூற்றாண்டு நிகழ்வை வைக்கத்தில் கூடி நடத்தியது.

பிப் 12 2024ல் மகாவீரரின் 2550 ஆண்டை சிறப்பாக விஞ்ஞான் பவன் நிகச்ச்சியாக கொண்டாடியது.

ஜன 17, 2024ல் சத்திரபதி சிவாஜி முடிசூட்டியதின் 350 ஆண்டை அம்பேத்கர் சர்வதேச மய்யத்தில் கொண்டாடியது.

National selfhood என்கிற விழிப்பை தீவிரப்படுத்துவது

அந்த ஹிந்தி ஆங்கில இருமொழி அறிக்கையின் சில முக்கியமாக எனக்குப்பட்ட அம்சங்கள் இங்கு சொல்லப்பட்டுள்ளன. ஆங்கிலப் பகுதியில் அந்த அறிக்கை இப்படி முடிக்கப்பட்டுள்ளது

The situation is excellent. Centenary year is beckoning us.

Let us advance with confidence- let us work with certitude

Time is ours, it is waiting for us

நாடாளுமன்றத்திற்கு சென்ற எஸ் சி எம்பி க்கள் அவையில் செயலாற்றியமை- அவர்களின் பங்கு என்பது குறித்து ஒரு கட்டுரையை படிக்க நேர்ந்தது. நரேந்திர குமார் என்பவர் எழுதியுள்ளார். அவர் ஆய்விற்கு எடுத்துக்கொண்ட காலம் 1985-95. ஆய்வாளர் சுகதியோ தோரட் மற்றும் சுதா பாய் எடிட் செய்த புத்தகமான Politics of Representation என்பதில் நரேந்திரா கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் அறிக்கைகளின் மீது அவர்கள் எப்படி வினையாற்றினார்கள், நம்பிக்கையில்லா தீர்மானம், கவன ஈர்ப்பு, கேள்வி நேரம் போன்ற பல்வேறு அலுவல்களில் அவர்கள் பங்களிப்பு என்ன என சில கேள்விகளின் வழி பதிலை ஆசிரியர் தேடியுள்ளார்.

பல உறுப்பினர்கள் தலித் மாணவர் விடுதி, ஊக்கத்தொகை, காலியிடங்களை நிரப்புதல், தலித் நல நிதி போன்றவற்றை அதிகம் எழுப்பியிருக்கின்றனர். அதேபோல இடஒதுக்கீட்டு பிரச்சனை, பதவி உயர்வில் ஒதுக்கீடு, வன்கொடுமைகள், தெரு சுகாதார தொழிலாளர் பிரச்சனைகள் போன்றவற்றில் பேசியவர்களில் அதிகமாக எஸ் சி எம்பி க்கள் இருந்துள்ளனர். எஸ் சி எஸ் டி தேசிய கமிஷன் பில் தொடர்பாக 19 எம்பிக்கள் பேசியுள்ளனர். Free education to the children of safai karmacharies என்பதில் 27 எம்பி க்கள் உரையாற்றியுள்ளனர்.

1985-95 கால எழுப்பட்ட கேள்விகளில் ஏன் எவரும் நிலம் சார்ந்த பிரச்ச்னைகளை எழுப்பவேயில்லை என்கிற கேள்வியை நரேந்திரா வெளிப்படுத்தியுள்ளார்.

Reservation in Public schools, Non availability of Judges in HC, Sc விவாதமாகவில்லை என்கிறார். அவரின் ஆய்வில் அவர் வந்தடையும் புள்ளி dearth of discussion on policy questions என்பதாக இருக்கிறது.

எழுப்பட்ட நட்சத்திர கேள்விகளில் சில பெட்ரோல் பங்க், காஸ் ஏஜென்சி எவ்வளவு தரப்பட்டுள்ளது என்பதாக இருக்கிறது. இவையெல்லாம் துறை சார்ந்த ஆண்டறிக்கையிலேயே கிடைத்துவிடும். பெறப்படும் பதில்களில் பெரும்பாலும் திருப்தி அடைந்துவிடும் சூழல்தான் நிலவியது.

நாடாளுமன்ற கமிட்டியிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செலுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த முடியவில்லை என்கிற முடிவிற்கே ஆசிரியர் வருகிறார். நரேந்திர வரிகளில்

Thus , representation is not a guarantee of participation, and participation is not an insurance of effective representation. Effective representation expects proper judgement of policies

...though the Parliament does deliberate upon issues, it does so both poorly and inadequately. And even MPs raise concerns for SC, the response of the Govt remains negligible and muted.

வருகிற 2024 நாடாளுமன்றம் நல்ல அனுபவங்களை உருவாக்கினால் மகிழ்ச்சி

தலைமைஸ்தானம் அல்லது முக்கிய பொறுப்பு/ பதவி என இருப்பவர்களிடம் ஒருவகை வியாதி மனப்பாங்கும் சேர்ந்தே அமைந்துவிடும் போலும். தங்கள் seat power கண்டு அவர்கள் அதிசயித்து போகிறார்கள். தான் அதற்காகவே பிறந்தது போல நினைத்துக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். கண்ணாடி பார்க்கும்போது, கற்பனை செய்துகொண்ட கடவுள் வடிவமாக தன் சொந்த உருவம் தோற்றப் பொலிவை (தோற்ற பிழையை) தந்துவிடும் போல.

பொறுப்பிற்கு வரும்போது, மிகச் சாதாரண மனிதனுக்கு இது கிடைத்தது பெரும்பேறு என்றுதான் ஆரம்பிக்கிறார்கள். நாளாக ஆக , தான் தவிர்க்கமுடியா பேருருவம் என கற்பனை செய்துகொள்கிறார்கள். தான் தொட்டது பொன்னாகும் என்கிற மைதாஸ் உள் புகுந்து விடுவான் போலும். தன் வாயிலிருந்து வருவெதெல்லாம் உன்னதமானது , அதுவே சட்டமாக வேண்டும் என எதிர்பார்க்க ஆரம்பிக்கிறார்கள். இவருக்கு துதிபாட, திருபள்ளிஎழுச்சி செய்திட, அன்றாட அலங்கார பூஜைகள் செய்திட ஏராள அமைப்பு பூசாரிகள் கிடைத்துவிடுவர். அவருக்காக நீக்கமற கம்பு சுத்தும் கழகங்கள்/ ஷாகாக்கள் தோற்றுவிக்கப்படும்.

எவரிடமும் காதுகொடுத்து கேட்கும் பழக்கம் நின்றுபோகிறது. தனக்கு எல்லாம் தெரியும் என்கிற ஏகாம்பரத்தனம் எப்போதும் அவரிடம் விழிப்பாக கண் உருட்டிக்கொண்டிருக்கும். எதையும் தெரிந்து பேசவேண்டும் என்கிற கட்டாயமோ, மன நெறியோ இவருக்கு இருப்பதில்லை. இவரை வைத்துத்தான் ஓட்டவேண்டும் என ஒட்டுமொத்த அமைப்பும் அவரின் ஏகபோக 'தான் தோன்றித்தனத்திற்கு' சிறைபடுகிறது. தான் செய்யும் பேசும் எதற்கும் பொறுப்பேற்க வேண்டியதில்லை என்கிற புது மாதிரி மனித சாதியை , அது ஏதோ சாதனைப்போல, மனசாட்சி என்கிற பயிற்சி பயம் ஏதுமின்றி இவர் உருவாக்க தயங்கார்.

தினந்தோறும் எங்கும் எப்போதும் எதிலும் அவரே தெரிவது போல் பார்த்துக்கொள்ள ஏற்பாடுகளை அவர் செய்ய முயற்சிப்பார். விமர்சகர்கள் தோலை உரிக்க சதா காலமும் குயுக்தியாக சிந்தித்துக்கொண்டேயிருப்பார். மீறி விமர்சகர்கள் திமிறி எழுந்தால், பாருங்கள் நான் எவ்வளவு பாவம் என்னைப்போய் என்கிற சுய இரக்க காட்சிகளை பின்னுவார். நான் இப்படிப்பட்ட சாமான்யன் என அந்த அவதாரம் எளிய வேடம் காட்டும்.

அவரின் மனம் தனக்கான பீடத்தை எப்படியெல்லாம் மேல் உயர்த்த வேண்டுமோ, அதற்கான காய்களை திட்டமிட்டு நகர்த்திக்கொண்டிருக்கும். எப்போதும் எங்கும்

அச்சத்துடன், படபடப்புடன் அவர் உள் மனது செயல்படும். வெளியே அசகாய சூரன் என்கிற buildup காட்டும்.

மக்களின் ஆதரவு இருப்பதாக தெரிந்தவுடனேயே, அது தன் அவதார மேன்மைகளை , அது எவ்வளவு அவலமாக அலங்கோலமாகத் தெரிகிறது என கவலைப்படாமல் செய்யும். வெற்றி என்றால் நூறு சதத்தையும் அம்மனம் அபகரிக்க விழையும். சுற்றி நிற்பவர்களை அப்படி சொல்லவேண்டும் என்கிற சூழலை உருவாக்கும். தோல்வி வந்தால், சுற்றி நின்றவர்களை இன்னும் கண்ணில் படுகிற எவரையும் சேர்த்து , அவர்களால்தான் என புகார் பாடும். தான் மட்டும் தனித்து எவ்வளவுதான் செய்ய முடியும், எல்லாம் துரோகிகள் என முத்திரை குத்தும்.

தன்னைப் பற்றி உருவாக்கப்படும் மிகை மதிப்பீடுகளை larger than life images யை அம்மனம் அப்படியே இன்னும் கொஞ்சம் கூட சேர்த்துக்கொண்டு நம்பும். தான் ஒருவன் மட்டுமே என்கிற நிகிலிச போக்கிற்கு உள்ளாகும். நடிப்பு தான் இயல்பு எனக் கருதும். வேடப்புனைவே வாழ்க்கை எனக் கருதும். உள் மனது hallow என்பது பற்றி அதற்கு அறிய நேரமே தராது. எப்போதும் busy ஆக இருப்பது போல் காட்டும். பேசுவதும் பறப்பதும் தான் அதன் busyக்கான அடையாளங்கள். மன சினுங்கல் அதற்கு வரக்கூடாது என அதன் பரிவாரங்கள் விழிப்புடன் இருப்பர். அவர்களுக்கு தெரியும் அவர் அழிவுடன் தாங்களும் மூழ்கிபோவோம் என. மன சிக்கலுக்கு அமைப்புகளில் மருந்து இருந்தும், ஆஸ்தான மருத்துவர்கள் எல்லாம் நலம் என அறிக்கை கொடுத்துவிடுவர்.

எப்பவாவது இவர் பேசாமல் ஞானிகள் போல் காட்டிக்கொள்வார். பேசத்தொடங்கினால் அவ்வளவுதான்….. அமைப்பிற்குள்ளும் சத்தம் கேட்க துவங்கியுள்ளது…அபத்தம் படு அபத்தமென…

4-6-2024

இடதுசாரிகள் 2024 நாடாளுமன்ற தேர்தலில் முன்னணியில் இருக்கின்ற இடங்கள்..தேர்தல் கமிஷன் தகவல் அடிப்படையில்

சிபிஎம்

ராஜஸ்தான் சிகார் தொகுதி தோழர் அம்ரராம் வெற்றி- பாஜக வேட்பாளர் விட 72896 வாக்குகள் கூடுதலாக.

அலத்தூர் கேரளா, தமிழகத்தில் திண்டுக்கல்- மதுரை முன்னிலை- 3 இடங்கள்

சிபிஅய்

தமிழகத்தில் நாகை, திருப்பூர் இரண்டு இடங்கள் முன்னிலை

சிபிஎம் எல் லிபரேஷன்

பீகார் அர்ரா, கராகட் இரு இடங்கள் முன்னிலை

ஆர் எஸ் பி

கேரளா கொல்லம் ஓரிடத்தில்

17:30 hrs

4-6-2024 20 hrs

Indian voters shown their maturity and giving mandate

limiting arrogance, hypocrisy , mean talks and all overdoing.

Hope better sense prevails. Refusing to learn any moral lessons is not good to the robust high democracy.

Now time to wait and watch Hon President's role

10-6-2024

நாடாளுமன்ற தேர்தலில் இடதுசாரிகள்

நடந்து முடிந்த 2024 தேர்தலில் இடதுசாரிகள் எங்கு நின்றார்கள் , அவர்களின் வெற்றி வாய்ப்பு எப்படி அமைந்தது எனப் பார்க்கத் தோன்றியது. மாநிலவாரியாக ஒவ்வொரு தொகுதியையும் எடுத்துக்கொண்டு இந்த தேடலை நடத்தவேண்டியிருந்தது. 543 தொகுதிகளையும் பார்க்க சில மணிநேர உழைப்பு தேவைப்பட்டது. அப்படிப்பார்க்கும்போதுதான் , பல குறைகளுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளான தேர்தல் ஆணையத்தின் வேலை மலைப்பை உணரமுடிந்தது. இதன் பொருள் அவர்கள் மீதான விமர்சனங்களுக்கு பொருள் இல்லை என்பதல்ல. வேலை கடினமான ஒன்று எனப் புரிந்துகொள்ள முடிந்தது. கட்சிகள் , சுயேட்சைகள் என்ற ஜனநாயக உரிமையில் ஏராள non serious players. அவர்கள் அனைவரையும் உள்ளடக்கி வாக்கு சீட்டு , எண்ணிக்கை, ஒவ்வொருவருக்குமான சின்னம், வாக்கு எண்ணிக்கை முடிவுகள்- தொகுதிவாரியாக என்கிற பெரிய வேலையை செய்திடும் இன்ஸ்டிட்யூஷன் அது. 543 தொகுதி பெயரை மட்டுமாவது எழுதிப்பார்த்தால் வேலை புரியும்.

2024 ல் மக்கள் பொதுவாக மேம்பட்ட புரிதலுடன் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள் . மாநிலத்திற்கு மாநிலம் புரிதல் மாறுபட்டுள்ளது என்பதும் கண்கூடு. கட்சிகள் மகிழ்ச்சியடையவும், அதே நேரத்தில் கவலையுடன் தங்கள் நிலையை பரிசீலிக்கவும் மக்கள் அவர்களை வைத்துள்ளனர். மாநிலங்களுக்கு மாநிலம் மக்களின் மனநிலை மாற்றத்தை பார்க்க முடிகிறது. தமிழக மக்கள் திமுக அணிக்கு 40 (39+1) வழங்கி அக்கட்சிகளின் நம்பிக்கையை உயர்த்தியுள்ளனர்.

பாஜக கட்சியோ, திரு மோடியோ தோற்கடிக்கமுடியாத அல்லது தோற்கடிக்கப்படகூடாத சக்தி அல்ல என்பதை மக்கள் தெரிவித்துள்ளனர். திரு மோடி அவர்களின் உடல் அசைவு மொழி காட்டுகிற அலட்சியம் அதிகாரத்துவம், அவரின் தேர்தல்கால கண்ணியக் குறைவான பேச்சுகள் , இந்துகடவுளர்களிடம் அவர் மிகையாக காட்டிய ஆராதனைகள் ஆகியவற்றை இந்துக்களில் ஒரு பகுதியினர் ரசிக்காமல் நிராகரித்துள்ளனர். முஸ்லீம்கள் தங்கள் முழு எதிர்ப்பை வாக்குகள் வழி காட்டியுள்ளனர். ஆனாலும் அவரால் ஆட்சி அமைக்க முடிந்துள்ளது. பாஜக தான் தவறவிட்டுள்ள உட்கட்சி ஜனநாயகத்தை காக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

காங்கிரஸ் ராகுலுக்கு நம்பிக்கை கூடியுள்ளது . ஏற்கத்தகுந்தவராக மாறி வருகிறார். ஆனால் காங்கிரஸ் பாஜகவை வீழ்த்த முழுமையாக வட்டார மாநில கட்சிகளை நம்பவேண்டிய நிலையில்தான் இருக்கிறது. காங்கிரஸ் இந்த நிலையில் மகிழ்ச்சி கொள்ளும் அளவிற்கு , சுயசோதனையும் தேவைப்படுகிற கட்சியாகவே இருக்கிறது. அங்கும் மேம்பட்ட மனம் திறந்த செயலுக்கு உத்வேகம் கூட்டக்கூடிய உள் விவாதங்கள் தேவைப்படலாம்.

வட்டார கட்சிகள் எல்லாமே , விடுதலைக்கு பின்னர் உச்சமாக கோலோச்சிய காங்கிரசை வீழ்த்தியே வளர்ந்தன. அவைகளின் பிறப்பு வளர்ச்சி என்பதெல்லாம் காங்கிரஸ் வீழ்ச்சியை வைத்தே இருந்தன. பல மாநிலங்களில் வட்டார கட்சிகள் காங்கிரஸ் செல்வாக்கை கணிசமாக குறைத்து விட்டன. காங்கிரசை பலவீனப்படுத்துதல் என்பதில் இடதுசாரிகளுக்கும் அப்போது கணிசமான பங்கிருந்தது.

தேசிய அரசியல் Congress centric என்பதிலிருந்து BJP centric ஆக மாறியிருக்கிறது. காங்கிரஸ் கட்சியோ பாஜகவோ வலுவாக இருக்கும் மாநிலங்களில் தேசிய கட்சிகளை துடைத்தெறிந்து வட்டார கட்சிகளின் உதயம் வளர்ச்சி என்பதும் முற்றிலுமாக நிறைவேறும் என்றால் மட்டுமே , மய்ய ஆட்சி என்பது மாநில கட்சிகளின் கூட்டாட்சி என்ற திசையை எடுக்கும். அது ஒரு வகை புதிய சோதனையாக இந்திய அரசியலில் இருக்கும். Union of states என்பது பல நேரங்களில் union by states என்று புரிந்துகொள்ளப்படுவதைக் காண்கிறோம். இதுவரை கூட்டணி ஆட்சியில் தேசிய கட்சி தான் மய்ய அச்சாக இருந்துள்ளது.

இம்முறை தேர்தலில் இந்திய அரசமைப்பு சட்டம் முக்கிய இடத்தை பிடித்தது. திரு ராகுல் கூட்டங்களில் அப்புத்தகத்தை உயர்த்திக் காட்டினார். திரு மோடி மூன்றாவது முறை பிரதமர் என்றவுடன் அப்புத்தகத்தை வணங்கினார். அரசமைப்பு சட்டம் என்றால் பொதுபுத்தியில் டாக்டர் அம்பேத்கர் என்கிற பதிவு உள்ளது . அவர் சிலைகளில் அதை வைத்துக்கொண்டிருப்பார். ஆனால் தேர்தல் என்பதோ வேறாக இருக்கிறது. மாயாவதி அவர்களின் பிஎஸ்பி யோ, வேறு எந்த அம்பேத்கரிய கட்சிகளோ வாக்குகள் பெறாமல் செல்வாக்கை செலுத்தாதைக் காண்கிறோம். ராம்விலாஸ் பஸ்வான் கட்சி தனக்கான ஆறுதலைப் பெற்றிருக்கிறது.

இனி இடதுசாரிகளுக்கு வருவோம். இந்தியா கூட்டணியில் நின்று தேர்தலை சந்தித்தனர். இந்துத்துவா அரசியலை கடுமையாக விமர்சித்தனர். மோடியின் செயல்பாடுகள் , திட்டங்களை கடுமையாக விமர்சித்தனர். அதானி அம்பானி இந்திய பெரு முதலாளிகளுக்கு , குரோனி காபிடலிசத்திற்கு ஆதரவான அரசு என்கிற விமர்சனம் இருந்தது. வெளிநாட்டுக்கொள்கை குறித்த விமர்சனங்களையும் வைத்தனர். வேலையினமை குறித்த விமர்சனம் இருந்தது. ஆனால் இந்திய

முதலாளித்துவ உறவுகள்- நிலச் சீர்திருத்தம்- சுரண்டல் என மார்க்சிய புரிதல்களுடன் கூடிய சொல்லாடல்கள் குறைவாக இருந்தன. தேர்தலில் அவை பொதுவாக எடுபடாமல் போன அனுபவமும் காரணமாக இருக்கலாம். மாநில கட்சிகளின் முழக்கங்களுக்கு அவர்கள் மாடலை சிறப்பித்து சொல்லுதல், மத்திய மாநில உறவுகள் குறித்த உரையாடல்கள் இருந்தன.

விடுதலை அரசியல் தன்கால கட்சிகளின் உடைவுகளை பெரிதும் பார்த்து வருகிறது. காங்கிரஸ் பல உடைவுகளைக் கண்டது. கம்யூனிஸ்ட் கட்சிகள் உடைந்தன. சோசலிஸ்ட்கள் சிதறினர். மாநில கட்சிகளும் ஆங்காங்கே உடைவுகளை சந்தித்தே வருகின்றன. வலதுசாரி ஜனசங், இந்து மகாசபா சோதனை வழி பாஜக தன்னை உருத்தேற்றிக்கொண்டுள்ளது. பாஜக உட்கட்சி விவாதம் கடந்த 10 ஆண்டுகளில் சரிந்தே போனது. ஆர் எஸ் எஸ் அல்லாத பல சக்திகளை வாக்கரசியல் பலத்திற்காக அது சேர்த்துக்கொண்டது. மோடி ஆர் எஸ் எஸ்க்கும் மேலானவர் எனக் காட்டத்துவங்கினார். பாஜக உள்மோதல்கள் வலுத்து வலது கட்சியின் உடைவுகள் உருவாகுமா என்கிற கேள்வி பதிலுக்கு காத்து நிற்கிறது. அப்போது வலதின் சிவசேனா போன்ற பிரிவு கூட லிபரல் செண்ட்ரிஸ்ட்களால் சேர்த்துக்கொள்ளப்படும் காட்சிகள் உருவாகலாம்.

2

தேர்தல் கமிஷன் தனது இணையத்தில் மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் என 36க்கான - மாநிலவாரியாக தொகுதிகளின் முடிவுகளை வெளியிட்டுள்ளது. 53 கட்சிகளின் பெயர்களுடன் அவர்களின் அனைத்திந்திய வாக்கு சதத்தை வெளியிட்டுள்ளது. இதில் 40 கட்சிகள் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றுள்ளனர்.

அகில இந்திய வாக்கு சதத்தில் பாஜக 36.6 சதத்தை, காங்கிரஸ் 21.19 சதத்தைப் பெற்று தவிர்க்கமுடியாத தேசிய பெரும் கட்சிகளாக தங்களைப் புலப்படுத்திக்கொண்டுள்ளன. வட்டார அரசியல் இடங்களில் தங்களை வலுவாக நிரூபித்த சமாஜ்வாடி 4.58 திரிணமூல் 4.36 தெலுங்கு தேசம் 1.98 , திமுக 1.82 எனப் பெற்றுள்ளன. ஒயெஸ் ஆர் 2.06, பகுஜன் 2.04 , அதிமுக 1,39 பெற்றன.

சிபிஅய் 0.49 , சிபிஎம் 1.76, சிபிஎம் எல் லிப 0.27 பெற்றன. நோட்டா என்பதில் தேர்தல் ஆணையம் 0.99 சதத்தைக் காட்டியுள்ளது. இடதுசாரிகளில் இக்கட்சிகளுடன் பார்வார்ட் பிளாக், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி மற்றும் சோசலிஸ்ட் யூனிட்டி கம்யூனிஸ்ட் கட்சிகளையும் சேர்த்து அவர்கள் பெற்ற வாக்குகள் இங்கு தொகுத்து தரப்பட்டுள்ளன.

சிபிஅய்

ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், ஜார்கண்ட், கேரளா, சட்டிஸ்கர், மத்தியபிரதேசம், ஒரிசா, பஞ்சாப், தமிழ்நாடு, உபி, மேவ என 12 மாநிலங்களில் நின்றுள்ளது. தமிழ்நாட்டில் 2 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மாநிலங்களில் பெற்ற வாக்குகள் தரப்பட்டுள்ளன. கேரளாவில் கடுமையான போட்டியை காங், பாஜக இரு கட்சிக்கும் தந்ததைக் காணலாம். நின்ற மாநிலங்களில் சிபிஅய் வேட்பாள தோழர்கள் பெற்றவை.

ஆந்திராவில் குண்டூர் வாக்குகள் 8637

அஸ்ஸாம் லக்கிம்பூரில் 19631

ஜார்கண்ட் சட்ராவில் 14122 , ஹசாரிபாக்கில் 10468, தும்கா 11506 லோஹர் டாகா 16793

கேரளா வயநாட்டில் 283023 , மாவேலிக்காரா 358648, திருவனந்தபுரம் 247648, திருச்சூர் 337652

பீகாரில் பெகுசராய் 5,67,851

சட்டிஸ்கர் பஸ்தார் 35887

மத்தியபிரதேசத்தில் சிதி 20290, ஷாடல் 19883 , கார்கோன் 14686

பர்பானி 6649

ஒரிசா ஜகத்சிங்பூர் 8130

பஞ்சாப் பரிதாகோட் 14590

தமிழ்நாட்டில் திருப்பூர் 472739 நாகை 465044 (வெற்றி பெற்ற இரு தொகுதிகள்)

உபியில் பைசாபாத் 15637 (அயோத்தி தொகுதி) லால்கஞ் 12271 கோஷி 6993 ராபர்ட்ஸ்கஞ் 23852

மேற்கு வங்கத்தில் காட்டல் 74908 மேதினிப்பூர் 57785

தேர்தலுக்கு பின்னரான தன் அறிக்கையில் சிபிஅய் (ஜூன்5 2024) , பாஜக தோல்வி, இந்தியா கூட்டணி வெற்றியை சுட்டிக்காட்டிவிட்டு, இடதுசாரிகள் பெற்ற இடங்கள் குறித்து விரிவாக பரிசீலனை தேவைப்படுகிறது என்பதை உணர்த்தியுள்ளது.

The results of the 18th Lok Sabha election have ended the one party authoritarian, corporate backed communal fascist rule of BJP headed by the Prime Minister Narendra Modi. The people of India have given their verdict in defence of our constitution and secular democratic fabric of our country and against the politics of hate, discriminations, growing unemployment, attacks on federalism, minorities, democratic and human rights and unparallel miseries of the people with high price rise.

CPI congratulates the people for opposing and challenging the BJP by giving their verdict in defence of “Idea of India” enshrined in the constitution.

While congratulating the parties of INDIA block for their performances, CPI believes that the BJP could have been cut to size more if there could have been better seat-sharing among the partners and united campaigns.

CPI also wants to register its criticism against the Election Commission of India for its failure to contain the hate speeches by Narendra Modi on the issues of communal polarization

CPI will continue to play its important role within the INDIA block as it can play an important role in mobilizing the Indian people in defence of their fundamental rights and for a better future.

The results of the Left as a whole and CPI in particular demands proper introspection. Party will critically review the election results when detailed reports will be available.

3

சிபிஎம்

அஸ்ஸாம், ஆந்திரா, தெலங்கானா, கேரளா, கர்நாடகா, ஜார்கண்ட், மகாராஷ்ட்ரா, ஒரிஸ்ஸா, ராஜஸ்தான், தமிழ்நாடு, திரிபுரா, மேவ ஆகிய மாநிலங்களில் நின்றது. தமிழ்நாட்டில் இரு இடங்கள், கேரளாவில் 1, ராஜஸ்தானில் 1 என நான்கு இடங்களை பெற முடிந்தது. கேரளாவில் காங்கிரஸ் பாஜக எதிர்த்து கடும் போட்டியையும், மேற்கு வங்கத்தில் திரிணமுல் மற்றும் பாஜக எதிர்த்து போட்டியையும் இக்கட்சி தோழர்கள் எதிர்கொண்டனர். சிபிஎம் நின்ற தொகுதிகளும் பெற்ற வாக்குகளும்..

தமிழ்நாடு திண்டுக்கல் 670149 மதுரை 430323 (இரு தொகுதிகளிலும் வெற்றி)

ராஜஸ்தான் சிகார் 659300 வெற்றி

கேரளா ஆலத்தூர் வெற்றி 403447

கேரளாவில் நின்ற பிற தொகுதிகள்: காசர்கோட் 390010 கண்ணூர் 409542 வடகரா 443022 கோழிக்கோடு 374245

பாலக்காடு 345886 சாலக்குடி 330417 எர்ணாகுளம் 231932 இடுக்கி 298645 ஆலப்புழா 341047 பத்தனம்திட்டா 301504 அட்டிங்கல் 327367

ஆந்திரத்தில் அரகு 1,21,129

அஸ்ஸாம் பர்பேடா 96138

ஜார்கண்ட் ராஜ்மஹல் 37291

கர்நாடகா சிக்கபல்லபூர் 4557

மகராஷ்ட்ரா ஹிங்கோலி 14644

ஒரிஸ்ஸா புவனேஸ்வர் 4148

தெலங்கானா போங்கீர் 28730

திரிபுரா கிழக்கு 290628

மேவ முர்ஷிதாபாத் 518227 கிருஷ்ண நகர் 180201 பாரக்பூர் 109564 டம்டம் 240784 பஷீர்ஹட் 77899 மதுரபூர் 61100

ஜாதவபூர் 258712 கல்கத்தா தெற்கு 168531 ஹவுரா 152005 ஸ்ரீராம்பூர் 239146 ஹூக்ளி 139919 டைமண்ட் ஹார்பர் 86953

ஆரம்பாக் 92502 பர்துமான் புர்பா 176899 துர்காபூர் 153829 ஜார்கிராம் 77302 பங்குரா 105359 அசன்சால் 105964

போல்பூர் 99383 ஜல்பைகுரி 74092 ராணாகாட் 123810

தேர்தல் முடிவுகளை அடுத்து சிபிஎம் கட்சி வெளியிட்ட அறிக்கை (ஜூன் 4 2024) பாஜக வீழ்ச்சியை, இந்தியா அணி முன்னேற்றத்தை சொல்கிறது. இடதுகள் சற்று முன்னேறி இருப்பதாகவும் சொல்கிறது'

The Polit Bureau of the Communist Party of India (Marxist) has issued the following statement:

People's Verdict: Setback for BJP

The results of the 18th Lok Sabha election are a setback for the BJP. It has lost its majority in the Lok Sabha which it had got in the past two Lok Sabha polls in 2014 and 2019. This is a stinging blow to the image of invincibility built around Narendra Modi, who had boasted about winning 400 seats in this election.

The elections were held in the background of all out attacks on the opposition parties, misuse of Central agencies and massive use of money power. The Polit Bureau congratulates the people for standing up to these authoritarian attacks and safeguarding the Constitution, democracy and civil rights.

The INDIA bloc has put up a creditable showing having taken up the issues of unemployment, price rise, agrarian distress and the attacks on democracy and the Constitution. They were able to a considerable extent counter the communal electioneering indulged in by Modi and the BJP.

The results would have been more adverse for the BJP and the NDA if the Election Commission had ensured a level-playing field. It's abject failure to curb the inflammatory communal rhetoric of Narendra Modi and enforce the Model Code of Conduct is a blot on the reputation of the Commission.

The CPI(M) and the Left parties have registered a marginal improvement in their tally. A more detailed analysis will be undertaken after the full election results are available.

The verdict signals that the people are going to fight back all attacks on democracy, the Constitution and their livelihood.

4

சிபிஎம் எல் லிபரேஷன் :

பீகார் ஒரிஸ்ஸா பகுதிகளில் தன் செல்வாக்கை காட்டியுள்ளது

பீகார் அர்ரா 529382 கராகட் 380581 இரு தொகுதிகளிலும் வெற்றி

பீகார் நாலந்தா 3903038

ஒரிஸ்ஸா கோராபுட் 14852 ஆந்திராவில் காக்கிநாடா 2823

அகில இந்திய பார்வர்ட் பிளாக் AIFB

அஸ்ஸாம், கர்நாடகா, பீகார், ஆந்திரா, மேவ, உபி என பல மாநிலங்களில் நின்றாலும் பல இடங்களில் 5000க்கும் குறைவான வாக்குகளையே இக்கட்சி பெற்றுள்ளது. சில தொகுதிகளின் வாக்குகள் மாதிரிக்காக…

பீகார் பாடலிபுத்ரா 1302, பூர்ணியா 6854

மபி கஜூரஹோ 50215

மகாராஷ்ட்ரா நாக்பூர் 567 வார்தா 1438 மாதா 3067 மும்பாய் வடகிழக்கு 678

ஆந்திரா நந்தியால் 642, கடப்பா 755, ராஜம்பேட் 5672, மசூலிப்பட்டினம் 5254

ஜம்மு காஷ்மீர் அனந்நாக்1562 ஜம்மு 984

தெற்கு டெல்லி 540 பெர்ஹாம்பூர் 2291 தெலங்கானா செவல்லா 3748 மகபூபாபாத் 39136 ஜாகிராபாத் 1769

உபி கன்னோஞ் 801 பஸ்தி 2998 மீர்சாபூர் 3487 கான்பூர் 465

மேவ கூச்பிகார் 30267

நேதாஜிக்கான செல்வாக்கை வாக்குகளில் இக்கட்சியால் பெறமுடியவில்லை

ஆர் எஸ் பி

ஆர் எஸ் பி கொல்லத்தில் 443628 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளது. இங்கு அது சிபிஎம்மை தோற்கடித்தது.

பஞ்சாப் நின்ற இரு இடங்களில் 1000க்கும் குறைவாகவும், மேவ நின்ற மூன்று இடங்களில் அலிப்பூர் 39709 , ஜாய்நகர் 40113, பலூர்கஹட் 54217 பெற்றது

ஆர் எஸ் பி ஆந்திராவில் நர்சரபேட் 1245, இந்துபூர் 2051, நெல்லூர் 2804

SUCI Communist

பீகார், சட்டிஸ்கர், குஜராத், ஹரியானா, கேரளா, மேவ , டெல்லி, மபி ஆந்திரா, அஸ்ஸாம், ஜார்க்கண்ட் கர்நாடகா போன்ற பல மாநிலங்களில் 151 இடங்களில் நின்றது. இடதுசாரி கட்சியிலேயே மிக அதிக இடங்களில் நின்ற கட்சி. தேர்தல் முடிவைப் பற்றி எந்த கவலையும் கொள்ளாமல் நின்றிருப்பார்கள் போல இருக்கிறது. பெரும்பாலான இடங்களில் 1000க்கும் குறைவாகவும் பெற்றுள்ளனர்.

சில இடங்களில் 2000-4000 அளவில் பெற்றுள்ளது. சிப்தாஸ்கோஷ் இக்கட்சியை தொடங்கும்போது பெரும் கனவுடன் இருந்தார்.

இந்திய அரசியல் தேர்தலில் 2024ல் இடதுசாரிகள் ஒன்றாக ஏறக்குறைய 3 சத வாக்கைப் பெற்றுள்ளனர். இது பல வட்டார கட்சிகளைவிடக் கூடுதலானது என்றாலும், அவர்கள் செல்ல வேண்டிய தூரம் அதிகமாகவே இருக்கிறது. Self Introspection எப்படி வரப்போகிறது எனப் பார்ப்போம்.

10-6-2024